# யூலை- 10 - திங்கள்

**“நான் உனக்கு வாக்களித்ததை நிறைவேற்றுமளவும் உன்னைக் கைவிடமாட்டேன்”( தொ.நூ 28:15)**

## முதல் வாசகம் : தொடக்க நூல் 28 – 10 - 22

யாக்கோபு பெயேர்செபாவிலிருந்து புறப்பட்டு, கரானை நோக்கிச் சென்றான்.அவன் ஓரிடத்திற்கு வந்தபோது கதிரவன் மறைந்துவிட்டான். எனவே அங்கே இரவைக் கழிப்பதற்காக அவ்விடத்தில் கிடந்த கற்களில் ஒன்றை எடுத்துத் தலைக்கு வைத்துக் கொண்டு, அங்கேயே படுத்துறங்கினான்.அப்போது அவன் கண்ட கனவு இதுவே் நிலத்தில் ஊன்றியிருந்த ஓர் ஏணியின் நுனி மேலே வானத்தைத் தொட்டுக் கொண்டு இருந்தது. அதில் கடவுளின் தூதர் ஏறுவதும் இறங்குவதுமாய் இருந்தனர்.ஆண்டவர் அதற்கு மேல் நின்றுகொண்டு, ”உன் மூதாதையராகிய ஆபிரகாம்,ஈசாக்கின் கடவுளாகிய ஆண்டவர் நானே. நீ படுத்திருக்கும் இந்த நிலத்தை உனக்கும் உன் வழிமரபிற்கும் தந்தருள்வேன்.உன் வழிமரபோ நிலத்தின் மணலுக்கு ஒப்பாகும். நீ மேற்கு, கிழக்கு, வடக்கு, தெற்குத் திசைகளில் பரவிச் செல்வாய். உன்னிலும் உன் வழிமரபிலும் மண்ணுலகின் எல்லா இனங்களும் ஆசி பெறுவன.நான் உன்னோடு இருப்பேன். நீ எங்கு சென்றாலும் உனக்கு நான் காவலாயிருந்து இந்நாட்டிற்கு உன்னைத் திரும்பி வரச் செய்வேன். ஏனெனில், நான் உனக்கு வாக்களித்ததை நிறைவேற்றுமளவும் உன்னைக் கைவிடமாட்டான்” என்றார்.யாக்கோபு தூக்கம் தெளிந்து, ”உண்மையாகவே ஆண்டவர் இவ்விடத்தில் இருக்கிறார் நானோ இதை அறியாதிருந்தேன்” என்றுஅச்சமடைந்து, ”இந்த இடம் எவ்வளவு அச்சத்திற்குரியது! இதுவே இறைவனின் இல்லம், விண்ணுலகின் வாயில்” என்றார்.பிறகு யாக்கோபு அதிகாலையில் எழுந்து, தலைக்கு வைத்திருந்த கல்லை எடுத்து, நினைவுத் தூணாக அதை நாட்டி, அதன் மேல் எண்ணெய் வார்த்து,”லூசு” என்று வழங்கிய அந்த நகருக்குப் ”பெத்தேல்” என்று பெயரிட்டார்.மேலும் அவர் நேர்ந்து கொண்டது ”கடவுள் என்னோடிருந்து நான் போகிற இந்த வழியில் எனக்குப் பாதுகாப்பளித்து உண்ண உணவும், உடுக்க உடையும் தந்து,என் தந்தையின் வீட்டிற்கு நான் நலமுடன் திரும்பச் செய்வாராயின், ஆண்டவரே எனக்குக் கடவுளாக இருப்பார்.மேலும், நான் நினைவுத் தூணாக நாட்டிய இந்தக் கல்லே கடவுளின் இல்லம் ஆகும். மேலும், நீர் எனக்குத் தரும் யாவற்றிலும் பத்தில் ஒரு பங்கு உமக்குச் செலுத்துவேன்.”

**பதில்பாடல் :** என் இறைவா நான் நம்பியிருக்கும் இறைவன் நீரே

## நற்செய்தி : மத்தேயு 9 : 18 – 26

அக்காலத்தில் இயேசு தம்சீடர்களுடன் பேசிக்கொண்டிருந்தபொழுது, தொழுகைக் கூடத் தலைவர் ஒருவர் அவரிடம் வந்து பணிந்து, ”என் மகள் இப்பொழுதுதான் இறந்தாள். ஆயினும் நீர் வந்து அவள் மீது உம் கையை வையும். அவள் உடனே உயிர் பெறுவாள்” என்றார்.இயேசு எழுந்து அவர் பின்னே சென்றார். இயேசுவின் சீடர்களும் அவரைப் பின் தொடர்ந்தனர்.அப்பொழுது பன்னிரு ஆண்டுகளாய் இரத்தப்போக்கினால் வருந்திய ஒரு பெண் அவருக்குப்பின்னால் வந்து அவரது மேலுடையின் ஓரத்தைத் தொட்டார்.ஏனெனில் அப்பெண், ”நான் அவருடைய ஆடையைத் தொட்டாலே போதும், நலம்பெறுவேன்” எனத் தமக்குள் சொல்லிக்கொண்டார்.இயேசு அவரைத் திரும்பிப் பார்த்து, ”மகளே, துணிவோடிரு உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று” என்றார். அந்நேரத்திலிருந்தே அப்பெண் நலம் அடைந்திருந்தார்.இயேசு அத்தலைவருடைய வீட்டிற்குச் சென்றார். அங்கே குழல் ஊதுவோரையும் கூட்டத்தினரின் அமளியையும் கண்டார்.அவர், ”விலகிப் போங்கள் சிறுமி இறக்கவில்லை, உறங்குகிறாள்” என்றார். அவர்களோ அவரைப் பார்த்து நகைத்தார்கள். அக்கூட்டத்தினரை வெளியேற்றிய பின் அவர் உள்ளே சென்று சிறுமியின் கையைப் பிடித்தார் அவளும் உயிர்பெற்று எழுந்தாள்.இச்செய்தி அந்நாடெங்கும் பரவியது.

**தியானம்:** இறைவனின் படைப்பில் மிக உயர்ந்த படைப்பாக மனிதர்களாகிய நாம் இருக்கின்றோம். சாதாரண மனிதர்களாகிய நாம் எமது பிள்ளைகளை அளவுக்கதிகமாக அன்பு செய்கின்றோம். ஏனெனில் அவர்கள் எமது உயிரும் இரத்தமும் ஆக இருக்கிறார்கள். அவ்வாறே இறைவன் எம்மையும் அன்பு செய்கின்றார். ஆனால் நாம் எமது வாழ்வில் ஏற்படும் சோதனைகளின் போதும், துன்ப துயரங்களின் போதும் கடவுளை விட்டு விலகி செல்கின்றோம். இது தவறு. எமது நன்மைக்காகவே எல்லாம் செய்கிறார் என்ற உணர்வு நமக்கு ஏற்பட வேண்டும். நற்செய்தியில் பார்க்கும் இரண்டு சம்பவங்களும் வேதனையின் உச்சம். பல ஆண்டுகளாகக நோயுடன் போராடிய ஒரு பெண் ஒருபுறம், 12 வயதில் மரணத்தை தழுவிய சிறுமி மறுபுறம். இரண்டு குடும்பங்களிலும் அமைதி இருந்திருக்குமா? வேதனையும், கண்ணீரும்தான் இருந்திருக்கும். ஆனால் அவர்கள் யேசுவை தேடி வந்த போது அவர்களின் கண்ணீர் காணாமல் போய்விடுகிறது அல்லவா? எனவே நாமும் கடவுளை தேடி நாட வேண்டும். அப்போது முதல் வாசகத்தில் கூறப்பட்டது போல், அவர் நம்மை ஆசீர் வதித்து நலன்களால் நிரப்புவார், நம்மை கைவிடவே மாட்டார்.